US – 165

# II Semester B.Com./B.B.A./B.H.M. Examination, May 2017
## (2014-15 and Onwards) (CBCS) (F + R)
## Tamil
## LANGUAGE TAMIL (Part – I) (Paper – II)

Time : 3 Hours Max. Marks : 70

I. **விரிவான** விடை தருக.

1) சிவ பெருமானின் சிறப்புக்களை திருஞான சம்பந்தர் பாடல்வழி விளக்குக. 10

**(அல்லது)**

சிவபெருமானின் பெருமைகளை மாணிக்கவாசகர் பாடல்கள் வழி நிறுவுக.

2) ஔவையார் பாடல்களில் அமைந்துள்ள அறக்கருத்துக்களை விளக்குக. 10

**(அல்லது)**

ஒட்டக்கூத்தர் பாடற் பொருளைத் தொகுத்து எழுதுக.

II. **இடம் சுட்டிப்** பொருள் விளக்கம் தருக.

1) பேடை மயிலொடும் கூடிப்
பிணைந்து வருவன கண்டேன்

**(அல்லது)**

மைம்மாம் பூம்பொழில் சூழ்
மழப்பாடியுள் மாணிக்கமே
அம்மான் நின்னையல்லால்
இனியாரை நினைக்கேனே 4

2) தானமும் தவமும் தான்செய்வ ராயின் 4
வானவர் நாடு வழித்திறந் திடுமே.

**(அல்லது)**

வையம் பெறினும் பொய்யுரைக்க
மாட்டார் தொண்டை நாட்டரே

P.T.O.

III. இரண்டிற்கு ஆசிரியர் குறிப்பு வரைக. (2×3=6)

1) மாணிக்கவாசகர்.

2) ஔவையார்.

3) ஒட்டக்கூத்தர்.

4) புகழேந்தி.

IV. இரண்டினைத் திறனாய்க. (2×14=28)

1) தண்ணீரும் பண்பாடும்.

2) அதை மறந்திட்டிங்களேய்யா.

3) இடியுடன் கூடிய மழைநாளில்.

4) கடல் உறவு.

V. மூன்றில் ஒரு பங்காக சுருக்கி வரைக. 8

உழவர்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதே முதன்மை நோக்கம் என்றாலும் சங்கங்கள் எதிர்பார்த்த அளவிற்குச் சிறந்த வளர்ச்சியைப் பெறவில்லை. இதற்கான காரணங்களாகப் பின்வருவனவற்றை நிபுணர்கள் காட்டுகின்றனர். மக்கள் தாமாகவே முன்வந்து இவற்றில் பங்கு பெறவில்லை. கழகங்கள் அரசுத்துறைகள் போலச் செயல்படுகின்றன. கழகங்களின் பொறுப்பாளர்களுக்குச் சரியான பயிற்சி இல்லாததால் அவர்கள் உழவர்களின் தேவைகளை முழுமையாக அறிய இயலவில்லை. நிதிப்பாற்றாக்குறையும் பெரிய குறையாக உள்ளது. ரிசர்வ் வங்கி கூட்டுறவு கழக வங்கிகளுக்கு கடன்தர முன்வந்தாலும் மாநிலக் கூட்டுறவு கழக வங்கிகள் அந்தப் பயனை முன்வந்து பெற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. உழவர்களின் தேவைகள் முழுமையாக நிறைவேற்றப்படும் வகையில் கடன் உதவி வழங்கப் படுவதில்லை. வேளாண்மை சார்ந்த தேவைகளுக்கு மட்டுமே கடன் தருகின்றனர். எனவே மீண்டும் வட்டி அதிகம் கொடுத்துத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள வேண்டியுள்ளது. கடன் தருவது மட்டுமே தங்களது பணி என்ற முறையில் சங்கங்கள் செயல்படுகின்றன. வேறு எவ்வித உதவியையும் தாமாகவே முன்வந்து செய்வதில்லை மக்களுக்கு இக் கழகங்களின் நோக்கம் சரியான முறையில் புரியவில்லை. தங்கள் நலனுக்காகவே அமைந்தவற்றைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளத் தவறி விடுகின்றனர். பாரபட்சமாக நடந்து கொள்வது உறவு சலுகை போன்ற குறைகளும் உள்ளன.

---